மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
க.பொ.த உயர்தரப் பரீட்சை
மூன்றாந் தவணை - 2026

புவியியல் Geography	Three Hours 10 minutes Gr -12 (2027)	22	T	I,II

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள்:

- **இவ் வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.**
- **பகுதி I, 15 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இவ் வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.**
- **பகுதி II இல் இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.**
- **பகுதி III இல் "அ", "ஆ", "இ" பகுதிகள் ஒவ்வொன்றிலிருந்தும் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.**

பகுதி I

1. இடவிளக்கப்படத்தில் கபில நிறத்தினால் காட்டப்படும் பண்பாட்டம்சமாக அமைவது,
   (1) நடைபாதை (2) அணைக்கட்டு (3) ஜீப் வண்டிப்பாதை
   (4) சமவுயரக்கோடு (5) பாலம் (.....)

2. புவியியல் தகவல் முறைமையின் காவித் தவுகளில் கோடுகள் மூலம் காட்டப்படும் அம்சம்
   (1) கட்டிடம், கிணறு (2) வீதி, குளம் (3) கால்வாய், பயிர்நிலம்
   (4) வீதி, நதி (5) நீர்த்தேக்கம், பயிர் நிலம் (.....)

3. 1:25,000 அளவுத்திட்ட இடவிளக்கப்படத்தில் 12km நீளமான வீதி எத்தனை cm இல் காட்டப்படும்?
   (1) 24cm (2) 12cm (3) 36cm (4) 06cm (5) 48cm (.....)

4. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையில் (GPS) செய்மதிகள் எத்தனை கிலோ மீற்றர்களுக்கு அப்பால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது?
   (1) 22200km (2) 20200km (3) 20020km
   (4) 2200km (5) 20000km (.....)

5. தொலையுணர்வு தொழில்நுட்பத்தில் (Remote Sensing technics) விண்வெளி மேடைகளாக பயன்படுத்தப்படுவன.
   (1) அசையும் வாகனத்தில் தூக்கி, கோபுரம், புகைப்படக்கருவி
   (2) விண்வெளி விமானம், ஹெலிகொப்டர், சிறியரக விமானம்
   (3) செய்மதிகள், ஏவுகணைகள், விண்வெளி ஓடங்கள்
   (4) கோபுரம், ஹெலிகொப்டர், செய்மதிகள்
   (5) புகைப்படச்சுருள், ஏவுகணைகள், சிறியரக விமானம் (.....)

Past Papers Wiki

6. புவியின் உட்கட்டமைப்பில் கொன்ராட் எல்லை, மோகோரோவிக் எல்லை ஆகியவற்றினால் பிரிக்கப்படுவன முறையே
   (1) புவியோடு - இடையோடு, உட்கோளவகம் - வெளிக்கோளம்
   (2) உட்கோளவகம் - வெளிக்கோளவகம், சீயல் படை - சீமாப் படை
   (3) இடையோடு - வெளிக்கோளவகம், புவியோடு - இடையோடு
   (4) சீயல்படை - சீமாப்படை, புவியோடு - இடையோடு
   (5) சீயல்படை - சீமாப்படை, இடையோடு - கோளவகம் (.....)

7. இலங்கையில் எரிபொருள் கனியமான உயிர்ப்படிவுகள் காணப்படும் இடங்கள்
   (1) தியத்தலாவ, கைக்காவெல, இந்துருவ
   (2) முத்துராஜவல சேற்று நிலம், தியத்தலாவ
   (3) தியத்தலாவ, சேருவில, பண்டாரவளை
   (4) முத்துராஜவல, விலகெதர, தியத்தலாவ
   (5) புல்மோட்டை, நாயாறு, நிலாவெளி (.....)

8. தகடுகள் அசைவுக்குட்படுகின்ற முறைக்கேற்ப ஒருங்கும் தகட்டசைவினால் உருவாகும் நிலவுருவம்
   (1) சமுத்திர அகழிகள் (2) குறைகள் (3) சமுத்திர மத்திய முகடுகள்
   (4) எரிமலைத் தீவுகள் (5) மடிப்பு மலை (.....)

9. இலங்கையில் வரண்ட பிரதேசங்களில் வருடாந்த மழைவீழ்ச்சி குறைவாக பெறும் பிரதேசங்களில் ஒன்று
   (1) கொழும்பு (2) பதுளை (3) மன்னார் (4) மாலிபொட (5) நுவரெலியா (.....)

10. இலங்கையில் அண்மையில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்திய டித்வா புயலினால் பெரிதும் பாதிப்புக்குள்ளான மாவட்டங்கள்
   (1) பதுளை, கண்டி (2) அம்பாறை, மட்டக்களப்பு
   (3) பதுளை, யாழ்ப்பாணம் (4) கிளிநொச்சி, முல்லைத்தீவு
   (5) அனுராதபுரம், வவுனியா (.....)

11. 2024 ஆம் ஆண்டு தரவுகளின் படி இலங்கையில் சனத்தொகை கூடிய மாவட்டம்
   (1) கொழும்பு (2) கம்பஹா (3) களுத்துறை (4) கண்டி (5) குருநாகல் (.....)

12. குறிப்பிட்டதொரு நிச்சயிக்கப்பட்ட புவியியல் அலகினுள் குறித்தொரு காலப்பகுதியில் வாழுகின்ற முழு மக்களினதும் எண்ணிக்கை
   (1) குடித்தொகை வளர்ச்சி (2) குடித்தொகைப் பரம்பல்
   (3) குடித்தொகைப் பருமன் (4) குடித்தொகை அடர்த்தி
   (5) குடித்தொகைச் சேர்க்கை (.....)

13. இலங்கையின் நீர்ப்பாசன முறைகளில் உயர் நிலங்களுக்கு நீர் வழங்குவதற்காக பயன்படும் முறை
   (1) புவியீர்ப்பு நீர்ப்பாசன முறை (2) தரைக்கீழ் நீர்ப்பாசன முறை
   (3) மேலேற்று நீர்ப்பான முறை (4) நுண் நீர்ப்பாசன முறை
   (5) மேற்பரப்பு நீர்ப்பாசன முறை (.....)

14. இலங்கையில் காணப்படும் புனித நகரம்
   (1) பிலியன்தல (2) யாழ்ப்பாணம் (3) அனுராதபுரம்
   (4) கொழும்பு (5) கதிர்காமம் (.....)

15. சர்வதேச ஈரநில தினம் கொண்டாடப்படும் தினம்
   1. பெப்ரவரி - 02 2. பெப்ரவரி - 22 3. யூன் - 05
   4. மார்ச் - 08 5. டிசம்பர் - 10 (.....)

(15x1= 15 புள்ளிகள்)

பகுதி II (அ)

1. இலங்கை நில அளவைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 1:50000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. சமவுயரக் கோடுகளுக்கான இடைவெளி 20m ஆகும். இப் படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

   (i) படப்பிரதேசத்தில் A, B, C, D எனப் பெயரிடப்பட்ட கட்டத்தினுள் காட்டப்பட்டிருக்கும் பௌதிக அம்சங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

   (ii) படத்தில் நாற்பக்கல் E இல் காட்டப்பட்டுள்ள இரண்டு சேவை நிலையங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

   (iii) படப்பகுதியில் வடக்கில் இருந்து தெற்காகச் செல்லும் B - 801 பிரதான வீதியின் நீளத்தினைக் கிலோ மீற்றரில் தருக. (01 புள்ளி)

   (iv) (a) நாற்பக்கல் E இனை 1:25000 என்ற அளவுத்திட்டதில் மீளவும் வரைக. (02 புள்ளிகள்)

   (b) படப் பிரதேசத்தில் காணப்படும் நான்கு வீதி வகைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

   (v) உமக்கு வழங்கப்பட்ட பிரதேசத்தின் நேர்கோட்டு அளவுத் திட்டத்தினை வரைக. (02 புள்ளிகள்)

   (vi) உமக்கு வழங்கப்பட்ட பிரதேசத்தில் குடியிருப்பு பரம்பல் பற்றி இரண்டு காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக. (05 புள்ளிகள்)

   (vii) படப்பிரதேசத்தின் தரைத்தோற்றத்திற்கும் விவசாய நிலப் பயன்பாட்டிற்குமிடையிலான தொடர்பினை ஆராய்க. (04 புள்ளிகள்)

பகுதி - II (ஆ)

2. தரப்பட்ட உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்தி பின்வருவனவற்றை குறித்துப் பெயரிடுக.

   - பெரிய பிரிப்பு மலைத்தொடர்
   - பம்பாஸ் புல்வெளி
   - ஹோர்முஸ் நீரிணை
   - யாங்சி நதி
   - தெகிரான்
   - குறைல் நீரோட்டடம்
   - வெனிசுவெலா
   - தார் பாலைவனம்
   - ஐக்கிய நாடுகள் சபையில் இறுதியாக இணைந்து கொண்ட நாடு
   - Cop30 காலநிலை மாற்றம் இடம் பெற்ற நாடு

   (10x1=10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

பகுதி - III - (அ)

3. (i) புவியியல் தகவல் முறைமை என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) புவியியல் தகவல் முறைமையின் நான்கு கூறுகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iii) புவியியல் தகவல் முறைமையின் பயன்பாடுகள் மூன்றினைச் சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) புவியியல் தகவல் முறைமையின் பிரதான தரவு மூலாதாரங்கள் நான்கினைக் குறிப்பிட்டு இரண்டினை விபரிக்குக. (05 புள்ளிகள்)

4. (i) செய்முறைப் புவியியலில் பயன்படுத்தப்படுகின்ற நுட்பமுறைகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) புவியியல் தகவல் தொடர்பாடலின் செய்முறைப் புவியியல் நுட்ப முறைகளின் பயன்பாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) கருப்பொருள் படங்களின் பயன்பாடுகள் மூன்றினை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) நவீன படவரைகலையியலின் பொதுவான பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

பௌதிகப் புவியியல் - III (ஆ)

5. (i) தொகுதி என்பதால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) தொகுதியின் வகைகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) வளிமண்டலம் எவ்வாறு மனிதனைப் பாதிக்கின்றது என்பதை மூன்று உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) மனிதனின் சாதகமற்ற நடவடிக்கைகளினால் வளிமண்டலத்தொகுதி எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை மூன்று உதாரணங்கள் தந்து சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

6. (i) உலகில் பனிக்கட்டியாறுகள் காணப்படும் நான்கு பிரதான பகுதிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) பள்ளத்தாக்குப் பனிக்கட்டியாற்றுப் பிரதேசங்களில் மூன்று வழிகளில் இடம்பெறும் அரித்தலை சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) பள்ளத்தாக்கு பனிக்கட்டியாற்றுப் பிரதேசங்களில் அரித்தல் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் மூன்று நிலவுருவங்களை பொருத்தமான வரை படங்களுடன் சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) பனிக்கட்டியாறு காணப்படும் பிரதேசங்களின் பொருளாதார முக்கியத்துவங்கள் மூன்றினைக் விபரிக்குக. (06 புள்ளிகள்)

பகுதி III மானிடப் புவியியல் (இ)

7. அட்டவணை 1 இல் 1950 தொடக்கம் 2030 வரையுள்ள காலத்துக்குரிய உலக நகராக்கம் பற்றிய தரவுகள் தரப்பட்டுள்ளன. (நகரக் குடித்தொகை சதவீதத்தில்)
அட்டவணை 1 : பிரதான பிரதேசங்களின் அடிப்படையில் உலகின் நகராக்கம் (1950 - 2030)

பிரதேசம்	வருடம்				
	1950	1970	1990	2010	2030
ஆபிரிக்கா	14.3	22.6	31.5	38.9	48.4
ஆசியா	17.5	23.7	32.3	44.8	56.7
ஐரோப்பா	51.7	63.1	69.9	72.9	77.5
லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன்	41.3	57.3	70.7	78.6	83.6
வடஅமெரிக்கா	63.9	73.8	75.4	80.8	84.7
ஓசானியா	62.5	70.2	70.3	68.1	68.9
அதிகளவு அபிவிருத்தியடைந்த நாடுகள்	54.8	66.8	72.4	77.2	81.4
குறைந்தளவு அபிவிருத்தியடைந்த நாடுகள்	17.7	25.3	34.9	46.1	56.7
உலகம்	29.6	36.6	43.0	51.7	60.4

- எதிர்வு கூறப்பட்டது.
மூலம் :- United Nations, World urbanization prospects (2018 Revision)

(i) நகரமயமாக்கம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணை 1 இல் தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஒவ்வொரு பிரதேசத்தினதும் விசேட பண்புகள் நான்கினைச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

(iii) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் நான்கினை சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் நகரமயமாக்கலுடன் தொடர்புடைய அண்மைக் காலப் போக்குகள் மூன்றினை விபரிக்குக. (06 புள்ளிகள்)

8. (i) சேதன விவசாயம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) சேதன விவசாயத்தில் பயன்படுத்தப்படும் முறைமைகள் மூன்றினை சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் நுகர்வு விவசாயத்தின் அண்மைக்காலப் போக்குகள் மூன்றினை சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) சேதனப் பயிற்செய்கையின் சுற்றாடல் சார் நன்மைகள் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

Past Papers Wiki

க.பொ.த உயர்தரப் பரீட்சை

மூன்றாந் தவணை - 2026

புவியியல் Geography	இடவிளக்கப்படம்	Gr - 12 (2027)	22	T	II

SRI LANKA 1 : 50,000 – SHEET No.76 – HAPUTALE (PART OF)



Past Papers Wiki

க.பொ.த உயர்தரப் பரீட்சை
மூன்றாந் தவணை - 2026

புவியியல் I Geography	உலகப் புறவுருவப் படம் Gr - 12 (2027)	22	T	II



PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library